A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 08 / 2023**

திரு P. ராஜாராம்,
எண்.102 A, ஹார்விபட்டி,
திருப்பரங்குன்றம், மதுரை – 625005

………மேல்முறையீட்டாளர்
(Rep by திருமதி S. காயத்ரி, வழக்கறிஞர்)

எதிர்

உதவி செயற்பொறியாளர்/ கிராமம்/திருப்பரங்குன்றம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, நேராஜி, முதல் தெரு, திருநகர் 3வது நிறுத்தம்,
மதுரை – 625006.

. . . எதிர்மனுதாரர்
(திரு A.கிருஷ்ணமூர்த்தி, உதவி மின்பொறியாளர்/ கிராமம்/திருப்பரங்குன்றம்)

**மனு பெறப்பட்ட நாள்: 18-01-2023**

**கேட்புரை நாள்: 13-04-2023**

**ஆணை நாள்: 18-04-2023**

18.01.2023 அன்று பெறப்பட்ட திரு P. ராஜாராம், எண்.102 A, ஹார்விபட்டி, திருப்பரங்குன்றம், மதுரை – 625005 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 08/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 13.04.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது இடத்தின் முன்பாக செல்லும் மின்பாதையை போதிய இடைவெளியிட்டு மின்வாரிய செலவிலேயே தள்ளி வைக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது சர்வே எண் 199/8B1, 8B2 ஆகிய பட்டா இடத்தின் முன்புறமாக செல்லும் உயரழுத்த மின்பாதையை மாற்றியமைக்குமாறு எதிர்மனுதாரரிடம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் இடத்தை ஆய்வு செய்து 30 அடி மின் கம்பத்திற்கு பதிலாக 36 அடி மின் கம்பம் நட்டு மின்பாதையை உயர்த்த DCW மூலம் விண்ணப்பம் செய்யுமாறு எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு தெரிவித்துள்ளார்.

2.3 வாரிய செலவிலேயே மின்பாதையை தள்ளி வைக்குமாறு மேல்முறையீட்டாளர் மதுரை மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மதுரை மின்பகிர்மான வட்டம் 22.09.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு :**

3.1 மதுரை மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 22.09.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*முறையீட்டாளர் மன்றத்தில் கலந்துகொண்டார், முறையீட்டாளரின் கோரிக்கையின் பேரில் DCW முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ள தாழ்வழுத்த மின்பாதை நுகர்வோர் பிளாட்டின் முன்புறம் ஹைவேஸ் ரோட்டில் 4 அடி இடைவெளியில் போதுமான பாதுகாப்புடன் அமைப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் மன்றத்தில் தெரிவித்ததை மன்றம் ஏற்றுக் கொண்டு மனு முடித்து வைக்கப்படுகிறது, செலவு தொகை இல்லை."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 13.04.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திருமதி S. காயத்ரி, வழக்கறிஞர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு A.கிருஷ்ணமூர்த்தி, உதவி மின்பொறியாளர்/ கிராமம்/திருப்பரங்குன்றம், மதுரை மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் கமர்சியல் பிளாட் மதுரை திருமங்களம் தேசிய நெடுஞ்சாலை அருகே தனக்கன்குளம் கிராமத்தில் சர்வே எண் 199/8B1, 8B2 ல் 8 ½

சென்ட் கமர்சியல் பட்டா இடம் ரோடு மட்டத்திலிருந்து 6 அடி பள்ளத்தில் ஹைவேஸ் இடத்துடன் உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 தன் இடத்திற்கு எதிர்புறமுள்ள கமர்ஷியல் பிளாட் உரிமையாளர் தனது இடத்திலிருந்து 15 அடி தொலைவில் உள்ள 30 அடி உயரமுள்ள மின் கம்ப மின் பாதை, தனது கமர்ஷியல் பிராஜெக்ட்க்கு இடைஞ்சல் என்று டெபாசிட் கான்டிரிபியூசன் பணி மூலம் சிப்ட் செய்ய மனு கொடுத்ததாகவும், மின்வாரிய பொறியாளர் எளிய வேறு மின் பாதை இருந்தும் அதை ஆய்வு செய்யாமல் தனது பிளாட்டின் மீது 27 அடி மின்கம்பம் மூலம் 4 வயர் மின் பாதை, எழுத்து மூலம் ஆட்சேபனை செய்தும் தான் இல்லாத நேரத்தில் அமைத்துவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தனது கமர்சியல் பிளாட்டின் பார்டரில் உள்ள ஹைவேஸ் எல்லைக் கல்லிலிருந்து போதுமான இடைவெளி இல்லாமல் தாழ்வழுத்த மின்பாதை சிப்ட் செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதியாக தெரிவிப்பதாகவும், ஆனால் செயற்பொறியாளர் 4 அடி இடைவெளி உள்ளது என்று தவறான அறிக்கையை கடிதத்தின் மூலம் குறைதீர்க்கும் மன்றத்திற்கு அறிக்கையை தருவதாகவும், இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்ட குறைதீர்க்கும் மன்றம் தனது கோரிக்கையை ஏற்காமல் குறைதீர்மன்றம் தன் மனுவை முடித்து வைத்துள்ளது. விசாரணையில் செயற்பொறியாளர் தான் 5அடி இடத்தை ஆக்கிரமித்து வேலி போட்டுள்ளதாகவும், அதன் வழியாகத்தான் D.C.W. மின் பாதை அமைக்கப்பட்டது என்றும் தவறான அறிக்கையை அளித்தார் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். பார்வை 3ன் கடிதத்தின் படி தன்னுடைய இடம் ஹைவேஸ் பார்டரில் உள்ளது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தனது இடத்தின் மேல் உள்ள 2 வெர்ட்டிக்கல் கட் பாய்ன்ட் மின் கம்பங்களுக்கிடையே 36 மீட்டர் தூரம் உள்ளதாகவும், இந்த மின்கம்பங்களுக்கிடையே 4 வயர் 7/259 ACSR மின் வயர், ஒவ்வொரு மின்கம்பத்தின் பின்புறமும் இடத்துக்காரர்களின் ஆட்சேபணையால் இழுவிசை தரக்கூடிய ஸ்டேக்கள் 2 போடாமல் அபாயகரமாக மின் பாதை இழுக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு 36 மீட்டர் தூரம் லூசு ஸ்பேன் (தொய்வாக மின் வயர் பொருத்துவது) மின் பாதை அமைக்க இந்திய பாதுகாப்பு மின் விதியில் இடம் உள்ளதா எனவும், இந்த அபாயகரமான மின் பாதையில் பள்ளமான

தன் இடத்தை சாலை மட்டத்திற்கு உயர்த்தும் பொழுது தனது கமர்சியல் பிளாட்டின் உள்ளே கனரக வாகனங்கள் கண்டிப்பாக நுழைய முடியாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். விரிவாக்கம் மேம்பாடு போன்ற அரசு பணி இல்லாத தனியாரின் விருப்பத்தின் பேரில் செய்யப்பட்ட இந்த D.C.W. பணிக்கு தான் பின்னாளில் மதிப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 பின்னாளில் வரும் மின்வாரிய அதிகாரிகள் செயற்பொறியாளர் அறிக்கையை ஏற்காமல் அறிக்கை தவறு என்று தெரிந்தும், ஏன் மேல்முறையீடு செய்யவில்லை எனவும், மதிப்பீட்டுத் தொகையை செலுத்தினால் தான் தங்கள் கட்டிடங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று கூறுவார்கள். தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து D.C.W. வயரை தள்ளி வைக்கவோ, அல்லது உயர்த்தவோ மதிப்பீடு தொகையை பின்னாளில் தான் செலுத்தாதவாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.5 தகுந்த அதிகாரி மூலம் ஆய்வு செய்து தன்னுடைய இடத்திலிருந்து ஹைவேஸ் இடத்திற்கு 4அடி மின் பாதை தள்ளி வைக்கப்பட்டுள்ளதா என்றும், மின் வாரிய லைன் மிகவும் தொய்வாக உள்ளதா என ஆய்வு செய்யுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மனுதாரர் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வரும் திரு.P. ராஜாராம், அவர்களின் மனைவி திருமதி. இந்திராணி பெயரில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணில் காலி இடம் உள்ளதாகவும், இக்காலி இடத்திற்கும் மதுரை திருமங்கலம் நெடுஞ்சாலை (Abondaned NH7) தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமான இடத்தில் சுமார் 10 வருடங்களுக்கு மேல் நிறுத்தப்பட்டுள்ள இரண்டு மின்கம்பங்களுக்கும் இடையில் தாழ்வழுத்த (LT 3phase 4wire line) மின்பாதை வாரிய விதிகளின்படி தொழில் நுட்ப ரீதியாக புதிதாக இழுக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுதாரர் ஹைவேஸ் சாலை ஓரத்தில் ஆக்கிரமிப்பு செய்து மின்வாரியம் பணியை மேற்கொள்ளப் போவதை அறிந்து புதிதாக கம்பி வேலி அமைத்துள்ளதாகவும், தொடர்ந்து

வருவாய் துறை மற்றும் தேசிய நெடுஞ்சாலை துறையும் ஆக்கிரமிப்பு உறுதி செய்து வேலியை அகற்றுவதற்கு வருவாய்துறை நெடுஞ்சாலை துறைக்கு கடிதம் எழுதியதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 வாரிய விதிகளின்படி மனுதாரரின் பிளாட்டிலிருந்து 4 அடிக்கு குறையாமல், போதிய இடைவெளியுடனும், பாதுகாப்புடனும் தேசிய நெடுஞ்சாலையில் மின் பாதை உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனுதாரர் தனது இடத்தின் மேல் இரண்டு வெர்ட்டிக்கல் கட்பாயிண்ட் உள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும், இது பொய்யான, தவறான தகவலாகும் எனவும், ஏற்கனவே நெடுஞ்சாலைக்கு சொந்தமான 10 வருடங்களுக்கு முன் ஊன்றிய மின்கம்பத்தில் (Horizontal Cut Point) படுக்கை வசத்தில் X arm படுக்கை வசத்தில் (Horizontal Cut point) அமைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மின்பாதை வாரிய விதிகளின்படி மதிப்பீடு தயார் செய்து அதிகாரிகளின் ஒப்புதல் பெற்ற பிறகு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இங்கும் இதே நடைமுறை பின்பற்றி பணிகள் செய்யும் பொழுது இடையூறு செய்து, தூண்டுதலின் பேரில் இழுவை கம்பிகள் போட எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனாலும் தற்பொழுது உள்ள மின்பாதை வாரிய விதிகளின்படி (Ground Clearance) உள்ளது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். பல வருடங்களுக்கு பிறகு பிளாட்டை உயர்த்துவதற்கு தற்பொழுது வாரியப் பணிகள் செய்ய இயலாது எனவும், இது தான் நடைமுறை வழக்கம் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 தற்பொழுது உள்ள தாழ்வழுத்த மின்பாதை மின்சார வாரிய விதிமுறைகளை கடைபிடித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், உயர் அதிகாரிகள் பார்வையிட்டு உறுதிபடுத்திய பிறகு ஒப்புதல் பெற்று பணிகள் முடிக்கப்பட்டுள்ளது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மின்கம்பங்கள் உள்ள இடம் மின்பாதை செல்லும் உயரம் போட்டோ படம் இணைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தேசிய தெடுஞ்சாலைத்துறை மூலம் (Varanasi –

Kanyakumari Road Abondoned NH7) Urban Limit + (Madurai– Thirumangalam) சாலை விரிவாக்கத்திற்கு மனுதாரர் குறிப்பிட்டுள்ள மின்பாதை மற்றும் மின்கம்பங்கள் உட்பட்ட 24க்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் மாற்றி அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யவும் கடிதம் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார் (LR No CRIF/2022/AE/Dated 24.01.2022)

6.8 மேற்கண்ட பணிகள் நடைபெறும் பொழுது மனுதாரரின் எதிர்பார்ப்புகள் நிறைவேற வாய்ப்புள்ளது என்பதை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்வதாகவும், எனவே மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யும்படி கனிவுடனும் பணிவுடனும் கேட்டுக் கொள்வதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>எதிர்மனுதாரரின் பதிலுரைக்கு மேல்முறையீட்டாளரின் வாதுரை</u>:

7.1 உதவி மின்பொறியாளரால் இழுக்கப்பட்ட தாழ்வழுத்த நான்கு வயர் லயன் மின்வாரிய Capital, Improvement பொது பணி அல்லாத தனியாரின் வேண்டுகோளின்படி செய்யப்பட்ட (Deposit Contribution) பணி D.C.W. விண்ணப்பதாரர் தன் பிளாட்டின் முன்பு இருந்த மின் வயரை உயர்த்துவதற்கு கொடுத்த விண்ணப்பத்தை மின் வயரை உயர்த்தினால் மதிப்பீடு அதிகமாகும் என்று தன் பிளாட்டில் போதுமான இடைவெளியின்றி விண்ணப்பதாரருக்கு ஏற்பட்ட இடைஞ்சல் தனக்கும் வருமாறு மின் பாதையை அமைத்து விட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.2 10 வருடங்களுக்கு மேல் உள்ள கம்பங்களில்தான் வயர் இழுக்கப்பட்டதாகவும், ஒரு கம்பம் தார் சாலையில் இருந்து இணைக்கப்பட்ட வரைபடத்தின் படி 5.5 அடி தூரமும், மற்றொரு கம்பம் 16.5 அடி தூரமும் உள்ளதாகவும், இந்த கிராஸாக உள்ள கம்பங்களில் தான் வயர்கள் இழுக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் தான் படத்தில் உள்ளவாறு தன் இடத்தில் மின் வயர் வருகிறதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 செயற்பொறியாளர் கடித படி தன்னுடைய பட்டா இடம் சர்வே எண் 199/8B1, 8B2 தனக்கன்குளம் 8 ½ செண்ட் சாலை ஓரம் தென்புரத்தில் உள்ளதாக ஆய்வில்

தெரியவருவதாகவும், மேலும் அரசு சர்வேயர் சாலை பீல்டு மேப் கொண்டு வராமல் தான் வைத்திருந்த சர்வே எண் 199 பீல்டு மேப்பை வைத்தும், விண்ணப்பதாரர் காட்டிய ஹைவேஸ் எல்லையிலிருந்தும் தவறாக அளந்ததாகவும், தன்னுடைய ஆட்சேபனையின்படி ஹைவேஸ் A.E. கம்ப்யூட்டர் முறைப்படி அளந்து தன் வேலியின் வெளிப்புறம் ஹைவேஸ் எம்பலம் பொறிக்கப்பட்ட கல்லை தன் வேலியின் வெளியே நட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 சர்வேயர் அளந்த தவறான அறிக்கையை தான் தங்களுக்கு அளித்துள்ளதாகவும், தன் பிளாட்டில் இருந்து 4 அடி தூரம் இல்லை எனவும், தலைவர் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற பார்வை – 3 உத்தரவுபடி 2 அடிக்குள் தான் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகவும், வரைபடத்தில் உள்ளவாறு வயர்கள் வடக்கில் இருந்து தெற்காகவும் $90^0$ ஆங்கிளில் தெற்கில் இருந்து கிழக்காகவும் திரும்பவும் கிழக்கில் இருந்து தெற்காகவும் இழுக்கப்பட்டுள்ளதை தெளிவாக தெரிகிறது எனவும், D.B.போல்களில், 12 சாக்கிகள் போடப்பட்டு 4 வெர்ட்டிகள் Cut பாய்ண்ட்டாக உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 AD பக்கம் உள்ளவர்களும் தங்கள் இடத்திற்கு இடைஞ்சலாக ஸ்டே கல் வருகிறது என்பதால் ஆட்சேபணை செய்து தெரு பக்கம் மின் வயரை அமைக்கும்படி முறையிட்டார்கள் எனவும், ஆனால் இழுவிசை தரக்கூடிய ஸ்டே கல் போடாமல் உதவி மின்பொறியாளர் வயர்களை மிகவும் தொய்வாக அமைத்து விட்டதாகவும், வயரை இழுத்துக் கட்டினால் எதிர் விசை இல்லாததால் கம்பங்கள் முறிந்து விடும் எனவும், மிகவும் தொய்வாகவும், 36 மீட்டர் ஸ்டே போடாமல் loose span அமைத்த இந்த வயர்களை பாதுகாப்பாக இழுக்கப்பட்டுள்ளது என்று பொய்யான தகவலை அளித்துள்ளதாகவும், (வயர்கள் JIO) கம்பத்திற்கு கீழ் உள்ளதை காட்டும் புகைப்படம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், புதிதாக இழுக்கப்பட்ட வயர்கள் ஹரிஜாண்டல் கட்பாய்ண்டாக அமைக்கப்பட்டுள்ளது என்றும் இவரே கூறுவதாகவும், மின்வயர் மிகவும் தொய்வாக உள்ளதால் போதிய கிரவுண்ட் கிளியரண்ஸ் இல்லாததால் தான் முறையிட்டுள்ளதாகவும், இன்னும் சில நாட்களில் ரோடு மட்டத்திற்கு தன் பள்ளமான பிளாட்டை மண்ணால் நிரப்புவதாகவும், அப்பொழுது தன் வயரை உயர்த்த சொல்லி

யாரிடம் முறையிடுவது எனவும், வயரை தள்ளிவைப்பதற்கும் D.C.W. எஸ்டிமேட்டிற்கு இந்த A.E. தன்னை பணம் செலுத்த சொல்லுவார் எனவும், அரசு பணி இல்லாத (Capital, Improvement) போன்ற பொது உபபோகத்திற்கும் இல்லாத தனியாரின் விருப்பப்படி செய்யப்பட்ட பணிக்கு தான் ஏன் பின்னாளில் லட்சக்கணக்கில் பணம் செலுத்த வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 D.C.W. விண்ணப்பதாரருக்கு மதிப்பீட்டை குறைக்க தன் இடத்தின் வழியே வயர் இழுத்த A.E. செய்த தவறுக்கு ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் D.C.W. முறையில் மின்கம்பங்களை மாற்றும் என்று கூறி செலவீனத்தை ஹைவேஸ் துறைக்கு மாற்றுகிறார் ஹைவேஸ் துறை என்ன செய்யுமோ என்ன முடிவு எடுக்குமோ என்று தெரியாது எனவும், ஹைவேஸை எதிர்பார்க்காமல் வயரை உயர்த்த வேண்டும் எனவும் தள்ளி வைக்க வேண்டும் அல்லது எளிதாக இருக்கும் தங்கள் தெரு வழியே மின் பாதை அமைக்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 8.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

8.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

8.2 மேல்முறையீட்டாளர் திரு.R.ராஜாராம் அவர்களுக்கு சொந்தமான வணிக பயன்பாட்டிற்கான நிலம் மதுரை திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலை அருகே தனக்கன்குளம் கிராமத்தில் சர்வே எண்.199/8B1, 8B2ல் 8 $^{1/2}$ செண்ட் பட்டா இடம் இருப்பதாகவும் அவரது இடத்திற்கு எதிர்புறமுள்ள வணிக பயன்பாட்டிற்கான பிளாட்டின் (Plot) உரிமையாளர் அவரது வணிக திட்டத்திற்கு இடைஞ்சலாக உள்ளதாக கூறி அவரது இடத்திலிருந்து 15 அடி தொலைவில் உள்ள 30 அடி உயரமுள்ள மின் கம்ப மின்பாதையை மாற்றி அமைக்க DCW முறையில் விண்ணப்பம் அளித்ததாகவும், அவ்விண்ணப்பத்தின் அடிப்படையில் கள ஆய்வு செய்த மின்வாரிய பொறியாளர் எளிய வேறு மின்பாதை இருந்தும் அதை ஆய்வு செய்யாமல் அவரது பிளாட்டின் மீது 27அடி மின்கம்பம் மூலம் 4 வயர் மின்பாதை அமைத்து விட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

8.3 எழுத்து மூலம் ஆட்சேபனை செய்தும், தான் ஊரில் இல்லாத நேரத்தில் தங்களுடைய வணிக பயன்பாட்டிற்கான பட்டா நிலத்தின் எல்லையில் போதிய இடைவெளியின்றி தாழ்வழுத்த மின்பாதையை எதிர்மனுதாரர் அமைத்து விட்டார் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

8.4 வெர்ட்டிக்கல் கட்பாய்ன்ட் (Vertical Cutpoint) உள்ள இரண்டு கம்பங்களுக்கு இடையே 36 மீட்டர் நீளம் 4 வயர் தாழ்வழுத்த மின்பாதை அமையும் பட்சத்தில் இரண்டு கம்பங்களுக்கும் எதிர்விசை தரக்கூடிய இரண்டு stay wire அமைக்க வேண்டும் என்றும் ஆனால் பக்கத்து பிளாட்காரரின் ஆட்சேபனையால் அவ்வாறு stay wire அமைக்காமல் மின்பாதையை மிகவும் ஆபத்தாக தொய்வாக அமைக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

8.5 Improvement, Capital அல்லாத தனியாரின் சொந்த நலனுக்காக செய்யப்படும் DCW பணி அடுத்தவரின் இடத்தில், புழங்கும் உரிமையை பாதிக்கும் வகையில் மின்பாதை அமைப்பது மின்வாரிய விதிகளில் இல்லை எனவும் நியாயமான ஆட்சேபனை எழுந்தால் DCW விண்ணப்பதாரர் தான் ஆட்சேபனையை நீக்க ஆவண செய்ய வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

8.6 மேல்முறையீட்டாளர் அந்த இடத்தில் எதிர்காலத்தில் வணிக வளாகம் அமைக்க உத்தேசித்து அதற்கான பணிகளை தொடங்கியுள்ள நிலையில் கனரக வாகனங்கள் செல்ல ஏதுவாக மேல்முறையீட்டாளரின் பிளாட்டின் எல்லையில் மின்வாரியம் அமைத்துள்ள தாழ்வழுத்த மின்பாதையை, மின்வாரியம் அனுமதித்துள்ள போதுமான இடைவெளி விட்டு தள்ளி வைக்க வேண்டும் எனவும் இரண்டு வெர்ட்டிக்கல் கட்பாய்ன்ட் கம்பங்களுக்கும் பின்னால் எதிர்விசை தரக்கூடிய இரண்டு stay wire அமைக்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

8.7 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் தனக்கன்குளம் – திருநகர் – திருமங்கலம் மெயின் ரோட்டில் பெட்ரோல் பங்க் நிறுவுவதற்கு ஏதுவாக அந்த இடத்தின் உரிமையாளர் அவர் இடத்தின் முன்பாக செல்லும் தாழ்வழுத்த மின்பாதையை DCW முறையில் மாற்றி அமைக்க விண்ணப்பம் பெறப்பட்டதன் பேரில் ஏற்கனவே பல வருடங்களாக தேசிய நெடுஞ்சாலையில் மேல்முறையீட்டாளரின் இடத்திற்கு

இடைஞ்சல் இல்லாமல் நிலைநிறுத்தியுள்ள மின்கம்பத்தில் புதிய மின்பாதை கொண்டு செல்லபட்டதாகவும் மின்பாதைக்கும் அவரது இடத்திற்கும் போதிய இடைவெளி உள்ளது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும், அந்த இரண்டு மின் கம்பங்களும் பத்து வருடங்களுக்கு முன்பே பயன்பாட்டிலிருந்ததை மேல்முறையீட்டாளர் கேட்புரையின் போது ஒப்புக் கொண்டார்.

8.8 மேல்முறையீட்டாளர் Highways சாலையோரத்தில் ஆக்கிரமிப்பு செய்து மின்வாரியம் பணியை மேற்கொள்ளபோவதை அறிந்து புதிதாக கம்பி வேலி அமைத்ததாகவும் தொடர்ந்து வருவாய்த்துறை மற்றும் தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆக்கிரமிப்பு உறுதி செய்து வேலியை அகற்றுவதற்கு கடிதம் எழுதியதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.9 ஏற்கனவே தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமான சாலையில், பத்து வருடங்களுக்கு முன்பு ஊன்றிய மின்கம்பத்தில் தற்பொழுது புதிதாக Horizontal Cutpoint அமைக்கப்பட்டு தாழ்வழுத்த மின்பாதையானது வாரிய விதிமுறைகளின்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதிகாரிகளின் ஒப்புதல் பெறப்பட்டு போதிய இடைவெளியுடன், பாதுகாப்புடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.10 இது சம்பந்தமாக தரைப்பகுதிக்கும், மின்பாதைக்கும் உள்ள இடைவெளி குறித்த விதிமுறைகள் பற்றி அறிந்து கொள்ள நாம் CEA (measure relating to safety and electric supply) Regulations 2010 இன் 58 வது விதியை ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“58. Clearance above ground of the lowest conductor of overhead lines.-*

*(1) No conductor of an overhead line, including service lines, erected across a street shall at any part thereof be at a height of less than-*

*(i) for lines of voltage not exceeding 650 Volts - 5.8 meters*

*(ii) for lines of voltage exceeding 650 Volts but not exceeding 33 kV - 6.1 meters*

*(2) No conductor of an overhead line, including service lines, erected along any street shall at any part thereof be at a height less than-*

*(i) for lines of voltage not exceeding 650 Volts - 5.5 metres*

*(ii) for lines of voltage exceeding 650 Volts but not exceeding 33 kV - 5.8 metres*

*(3) No conductor of an overhead line including service lines, erected elsewhere than along or across any street shall be at a height less than –*

*(i) for lines of voltage up to and including 11,000 Volts, if bare - 4.6 metres*

*(ii) for lines of voltage up to and including 11,000 Volts, if insulated - 4.0 metres*

*(iii) for lines of voltage exceeding 11,000 Volts but not exceeding 33 kV" - 5.2 metres*

8.11 மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது என்னவென்றால் தரை பகுதிக்கும் நிறுவப்பட்ட மின்பாதை கட்டமைப்புக்கும் இடையே உள்ள இடைவெளி (Vertical *clearance) 5.5 metres* இருக்க வேண்டும் என்றும் தெரியவருகிறது.

8.12 மேல்முறையீட்டாளர் தன்னுடைய பிளாட்டின் முன்பாக ஆபத்தான நிலையில் மிகவும் தொய்வாக மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக நாம் அறிவது மேல்முறையீட்டாளரின் பிளாட்டிற்கு முன்பாக தேசிய நெடுஞ்சாலையில் பத்து வருடங்களுக்கு முன்பு நிறுவப்பட்ட இரண்டு மின்கம்பங்களுக்கு இடையில் தாழ்வழுத்த மின்பாதை 4 அடி கிடைமட்ட இடைவெளியும் 20 அடி செங்குத்து இடைவெளியும் விட்டு அமைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். இது பாதுகாப்பு விதியில் கூறப்பட்ட இடைவெளியை விட அதிகமாக உள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் பிளாட்டிற்கும் மின் பாதைக்கும் உள்ள இடைவெளி பாதுகாப்பு சேமவிதிமுறைகளின்படி பாதுகாப்பாகவும் போதிய இடைவெளியுடன் இருப்பதும் தெரியவருகிறது. எனவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை. இருப்பினும், தாழ்வழுத்த மின்பாதையில் தொய்வு இருந்தால் அதனை நிவர்த்தி செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

8.13 மேலும், தேசிய நெடுஞ்சாலைத்துறை மூலம் (Varanasi – Kanyakumari Road Abondoned NH7) Urban Limit + (Madurai – Thirumangalam) சாலை விரிவாக்கத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், நிதி ஒதுக்கீட்டிற்காக காத்திருப்பதாகவும், நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின்னர் சாலை விரிவாக்கம் மேற்கொள்வதற்கு ஏதுவாக மின்வாரிய கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகளை மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு மாற்றி அமைக்கும் பட்சத்தில் மேல்முறையீட்டளாரின் பிளாட்டிற்கு முன்பாக பாதுகாப்புடன் தற்சமயம் அமைக்கப்பட்டுள்ள மின்பாதையானது மாற்றி அமைக்கப்பட உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கை எதிர்வரும் காலங்களில் தேசிய நெடுஞ்சாலை துறையின் கோரிக்கையின் அடிப்படையில் நிவர்த்தி செய்ய வாய்ப்பு இருப்பது தெரிய வருகிறது.

8.14 இருப்பினும் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்றி அமைக்க விரும்பும் பட்சத்தில் மின்பாதை இடமாற்றம் செய்ய ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

8.15 மேற்கூறிய விதியை ஆராயும்போது பாதுகாப்பாக நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்பது தெரிய வருகிறது.

## 9.0 முடிவுரை:

9.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி,

(i) மேல்முறையீட்டாளரின் காலி மனைக்கும் தாழ்வழுத்த மின்பாதைக்கும் உள்ள இடைவெளி பாதுகாப்பு சேமவிதிமுறைகளின்படி போதிய இடைவெளியுடன் இருப்பது தெரியவருகிறது. மேலும் விதிமுறைகளுக்கு உட்பட்டே பணிகள் நடைபெற்றதாக தெரியவருகிறது. எனவே மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

(ii) மேலும் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின் பகிர்மான விதிமுறைகளின் படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

9.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 08/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு P. ராஜாராம், – BY RPAD
எண்.102 A, ஹார்விபட்டி,
திருப்பரங்குன்றம், மதுரை – 625005

2. உதவி செயற்பொறியாளர்/ கிராமம்/திருப்பரங்குன்றம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, நேராஜி, முதல் தெரு,
திருநகர் 3வது நிறுத்தம், மதுரை – 625006.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ரேஸ் கோர்ஸ் ரோடு, K, புதூர், மதுரை – 625 007.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.